# வரலாற்றுப் புதையல்

## அங்கவான் பாக்கம்

## வரலாறும் மாலையும்

தொகுப்பு : அ. மு. ப.

518

# வரலாற்றுப் புதையல்

## அங்கவான் பாக்கம்

**வரலாறும் மாலையும்**

தொகுப்பு : அ. மு. ப.

**வள்ளியம்மாள் கல்வி அறம்**

**அண்ணாநகர் கிழக்கு, சென்னை-600 102.**

மாலையின் மிகப் பழைய பதிப்பு : 1900
இன்றைய பதிப்பு : ஜூலை, 1986

விலை ரூ. 4.00

அச்சிட்டோர்: கற்பகம் அச்சகம், சென்னை-600 002.
தொலைபேசி : 847174

# முன்னுரை

தமிழ்நாட்டு வரலாறு இன்றுவரையில் செம்மையாக எழுதப்பெறவில்லை. நிலத்தின் கீழும், நீரின் கீழும் புதைந்தும் ஆழ்ந்தும் உள்ள பொருள்கள் கண்டெடுக்கப் பெறின் தமிழகத்தின் தொன்மை உலகுக்கு விளங்கும். 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திய' பழம்பெரும் தமிழர் நாகரிகம் உலகுக்கு விளங்கும். அப்படியே ஊர் தொறும் அமைந்த பழங் கோயில்களில் அமைந்த சிலைகள், கல்வெட்டுக்கள், கலை அமைப்புக்கள் இவை களைப் படி எடுத்து ஆராயின் ஊர்களின் தொன்மையும் வாழ்வும் வளமும் பிற சிறப்பியல்புகளும் நன்கு விளங்கும். உண்மையில் இவையே தமிழனுக்குப் பிற பொன் புதையல் முதலியவற்றைக் காட்டிலும் சிறந்த புதையலாகும். இந்த நூலில் 'அங்கம்பாக்கம்' என்னும் சிறிய ஊரில் கண்ட வரலாற்றுப் புதையலின் ஒரு சிறு பகுதியே காட்டப் பெறுகின்றது. கல்வெட்டுக்களின் வழியே பலப்பல உண்மைகள் புலனாகும் அரசாங்கமும், ஆய்வாளர்களும், இந்து சமய அறநிலையத்தவரும் இத்துறையில் கருத் திருத்த வேண்டும்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பெற்று, இறுதி யாண்டில் — கி. பி. 1900-ல் — இன்றைக்கு எண்பத்தாறு ஆண்டுகளுக்கு முன் வெளியிடப் பெற்ற **'அங்கபுரத்து அம்பலவாண மாலை'** இன்று (6-7-1986) மறுபடி வெளி

வருகின்றது. இவ்வூரில் நான் பிறவாதமுன் — என் அன்னையார் வள்ளியம்மாள் பிறந்த ஆண்டில் வெளியான நூல் இது. இதன் வழி இவ்வூரின் வளமும் மக்கள் நலமும் பிற சிறப்புக்களும் அறிய இயலும். இந்தப் பதிப்பில் சீர் மட்டும் தனியாகப் பிரிக்கப் பெற்று (சந்திகள் பிரிக்காமல்— மூலத்தின் படியே) நூல் அச்சிடப்பெற்றுள்ளது. முதற் பதிப்பின் முன்பக்கமும் சாற்றுக்கவிகளும் அப்படியே படி எடுத்து அச்சிடப் பெற்றுள்ளன.

இந்நூலின் பிற்பகுதியில் அமைந்த அங்கபுரத்து அம்பலவாண மாலையில் இவ்வூரில் வாழ்ந்த சைவ வேளாளர் குலத்தவர் பண்பும் இயற்கை எழிலும் மரபும் நன்கு காட்டப் பெறுகின்றன. 'சத்தியாய்ச் சிவமாய்' என்ற முதுமொழிப்படி, சத்தியாகிய சிவகாமிக்கே எல்லா ஏற்றங்களும் தரப்பெற்று, அச்சத்தியோடு பொருந்திய அம்பலவனை இறுதியில் பாடல்கள் போற்றுகின்றன இத்தலத்தினை அன்போடு பூசிப்பவர் எல்லாப் பேறு களையும் — பெற்றனர் — பெறுவர் என்பது உண்மை யாகும்.

இந்த இறைவனை வழிபடின் எண்ணியது கைகூடும் என்பதை நேரில் அனுபவித்தவன் நான். இக்கோயிலுக்குச் சென்னையில் வீடு வாங்க நேர்ந்தபோது உண்டான இடர்ப்பாடுகளும் இந்த இறைவனையும் இறைவியையும் நெஞ்சால் நீடு நினைந்து போற்றியதால் அவை நீங்கிய நிலைகளும் பெருங்கதையாகும். இங்கே விவரிக்க இடமில்லை.

என் இளமைக் காலத்தில் இந்நூலைக் கண்டிருக் கிறேனாயினும் இதுபற்றி நான் அதிகம் எண்ணியதில்லை. பிற்காலத்தே இதை எப்படியும் மறு பதிப்பாக அச்சிட வேண்டும் என்ற உணர்வு எழுந்தது. அந்த உணர்வின் வழியே இன்று இந்நூல் வெளிவருகின்றது. அருட்சிவகாமி

அன்னையை முன்னிறுத்தி அம்பலவாணனைப் போற்றும் இப்பாடல்கள் பயில்வார்க்குப் பயன் தருவன.

நூலில் குறித்தபடி ஒரு காலத்தில் வளமுற்று வாழ்ந்த இவ்வூர் இன்று தன் நிலையில் தாழ்ந்துள்ளது. சோழர் காலத்தும் பிற்காலத்தும் கட்டப் பெற்ற கோயில்கள் இன்றும் உள்ளன. இவற்றைப் பற்றித் தினமணியில் வந்த கட்டுரையினையும் தில்லையின் கும்பாபிடேக மலரில் நான் எழுதிய கட்டுரையினையும் முதலில் இணைத்துள்ளேன். அவற்றின் வழியே இவ்வூரின் தொன்மையும் தொண்டும் பிறவும் புலனாகும்.

கோயிலைச் செம்மையாக வைத்திருக்க வேண்டிய அளவிற்குப் போதுமான வருவாய் உடையதாக இருப்பினும் கடந்த சில ஆண்டுகளில் இதன் பராமரிப்பு குறைந் துள்ளமை எண்ணத்தக்கது. இந்து சமய அறநிலையத் திணரும் அதன் வழியே செயலாற்றும் தக்காரும் குறை நீக்கி நலம் காக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளு கிறேன்.

இக்கோயிலுக்கு என் முன்னோர்கள் — மூன்று தலை முறைகளுக்கு மேலாக, பல மானியங்கள் விட்டு, இதன் நலம் காத்துள்ளனர். நான் இவ்வூரை விட்டே அரை நூற்றாண்டுக்கு முன் சென்றுவிட்டேனாயினும் அடிக்கடி வந்து அம்பலவாணரையும் அன்னை சிவகாமியையும் வணங்கும் பேறு பெற்றுள்ளேன். அந்த அடிப்படையிலேயே இந்த நூலும் இன்று இங்கு — அம்பலவர் திருக்கோயிலில் — வெளி வருகின்றது. ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியப் பணி இயற்றி, ஒய்வு பெற்றபின் என் அன்னையின் பெயரால் சென்னை, அண்ணா நகரில் அறநிலையம் அமைத்து, இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பிள்ளைகள் பயிலும் பள்ளிகளை நடத்தி வருகின்றேன். எனினும் நான் பிறந்த இவ்வூரின்பால் பற்றும் பாசமும் உடையவன்

ஆதலாலே இவ்வூர் பற்றிய மறைந்ததெனத் தக்க இந் நூலை இன்று வெளியிட முனைந்தேன். தினமணிச்சுடரில் கூறியபடி என்னை ஈன்ற அன்னையின் அருளும் உலகன்னை யாகிய சிவகாமியின் அருள் நோக்கும் அமைய இந்நூல் வெளிவருகிறது.

இந்த நூலும் எங்கள் வள்ளியம்மாள் கல்வி அறத்தின் வழியே வெளிவருகின்றது பொருத்தமாகும்.

இந்த மாலையின் ஒரு படியே (1900 ஆம் பதிப்பு) கிடைத்தமையின் அதைப் பத்திரப்படுத்த நினைத்தேன். அப்படியே அச்சிடத் தரின் ஏடு ஏடாகி, அழுக்குப் படிந்து கிழிந்து பொடியாகி பாழ்பட்டு விடுமே என அஞ்சினேன். என் அச்சத்தைப் போக்கும் நிலையில் இந்நூல் அச்சான கற்பகம் அச்சக மேலாளர் திரு. நாராயணன் அவர்கள் தாமே முன்வந்து பாடல்கள் அனைத்தையும் சீர்பிரித்துப் படி எடுத்து, அச்சுக்குத் தந்து, மூல நூலைக் காப்பாற்றி னார்கள். அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்ட வனாவேன்.

இவ்வூரின் நல்லன்பர்களும் இவ்வூரின்பால் அன்புள்ள வர்களும் இக்கோயிலை ஓம்பும் அறநிலையத்தவரும் இந் நூலையேற்று, இதில் குறிக்கப் பெற்றுள்ள நலன்களையும் வளங்களையும் மீண்டும் இவ்வூர் பெறத்தக்க வழியில் ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அம்பலவாணரின் அருளும் அன்னை சிவகாமியின் கருணை நோக்கும் அனைவருக்கும் அமைவனவாக!

அங்கம்பாக்கம்
6-7-1986

பணிவுள்ள,
அ. மு. பரமசிவானந்தம்

# அங்கம்பாக்கத்து அம்பலவாணர்

(தினமணி—சுடர்)

நாராயணஸ்வாமி

உலகுக்கெல்லாம் தலைவன் இறைவனென்பதால் அவனை வழிபடுவது நியதியாகும். அவ்விறைவனுக்கும் மேலானது ஒன்றுண்டா என்றால் "தாயினுஞ் சிறந்த தெய்வ மில்லை" என்ற பழமொழியே விடையளிக்கும். ஒருவன் புரிந்த கொடும் பிழையையும் பொறுத்துக் கொள்ளுபவர் உண்டென்றால் அவர் அவன் தாய்தான். தெய்வத்தினும் மேம்பட்டவள் தாய் என்று வழுத்தியதில் குறை ஒன்றுமில்லையே. இறைவி சிவகாமி அம்மையைத் தோத்தரிக்க முயன்றார் குமரகுருபரர். அவருக்குப் புலப் பட்டது ஒரு தாயின் பாசந்தான். அக்கருத்தை அடக்கி அப்படியே பாட்டாக உதிர்த்து விட்டார். அந்தப் பாடல்,

"பாலுண் குழவி பசுங்குடர் பொறாது என
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தகுதிக்குத் தன் அருள் கிடைப்ப"

என்பதுதான். 'தன் சிறு குழவி நோய்வாய்ப்பட்டு அல்லலுறும்பொழுது தாயின் நிலை என்ன? மருந்தின் காரத்தைச் சின்னஞ்சிறு குழந்தை தாங்குமா என்ற அச்சத்தால், தானே அக் காரங்களை உட்கொண்டு அதன் உக்கிரத்தை முறித்து ஸ்தன்யபானமாக வல்லவோ புகட்டுகிறாள். மானிடத் தாயின் நிலையே இவ்வாறாயின்

உலகத்தையே ஈன்று அதனைக் காக்கும் அன்னையின் நிலை எப்படி இருக்கும்! பிறவிப் பிணியில் வாடும் தன் குழந்தைகளுக்கு ஈசனின் அனுக்கிரகம் என்ற மருந்தை சிவகாமியாக, சிவனுக்கருகிலிருந்து, அவன் அருளை யேற்று தன் கிருபையெனும் அமுதமாய் மாற்றியல்லவோ பக்தர்களுக்குப் பாலிக்கின்றாள்.

இப்படிச் சிவகாமியாய் நின்ற கோலம் எல்லா ஆலயங்களிலு முண்டெனினும் இரண்டே தலங்களில் மூல நாயகியாய் விளங்குகிறாள். அவை சோணாட்டுத் தில்லையும், தொண்டை நாட்டு அங்கம்பாக்கமும் தாம். காஞ்சி காமாட்சிக்கு வெகு அருகில் அமர்ந்துவிட்டதில் வேறொரு விசேஷமுண்டு. காமாட்சி உறையும் இடங்களுக்கு மாத்திரம் காமக்கோட்டம் என்ற பெயரில்லை. சிவகாமி வதியும் பதிகளுக்கும் காமக்கோட்டம் என்று தான் பெயர். சிதம்பரத்தில் சிவகாமி வீற்றிருக்கும் நிலையை, 'காமக்கோட்ட முடைய பெரிய நாச்சியார்' என்று தான் கூறுவார்கள். அதே போல் காஞ்சி காமக் கோட்டத்திற்கு இணையாக இங்கும் ஒரு காமக் கோட்டத்தை ஏற்படுத்திய பெருமை அன்னை சிவகாமிக்கு உண்டு.

**புராணம்**

புராணம் என்று இவ்வூருக்கு இதுவரை ஏட்டில் எழுதப்படவில்லை. ஆனாலும் முதுபெரும் அர்ச்சகர் கர்ண பரம்பரையாய் வரும் வரலாறு இதுதான் என்று கூறுவதைக் கேட்போம்: வெகு காலத்திற்கு முன்பு தில்லை அந்தணர் ஒருவர் சிவகதியடைந்த தன் தந்தையின் அஸ்திகளைக் கங்கையில் சேர்த்துப் புனிதமாக்க, சிதம்பரத்திலிருந்து வாரணாசி நோக்கிச் செல்லுங்கால் இக் கிராமத்தை அடைந்தபொழுது இருட்டிவிட்டது. பிரயாணத்தை தொடர வேண்டுமானால் இருளில் ஆற்றைக் கடக்கவேண்டும். செய்வதறியாது திகைத்த இச் சஞ்சாரியை ஊரினர் இரவு தங்கிச் செல்லலாம் எனக்

கூறித் தங்கவைத்துவிட்டனர். காலையிலெழுந்த அத் தில்லை வாசிக்குத் தன் கண்களையே நம்ப முடியாத ஆச்சரியம் ஒன்று காத்திருந்தது. புதுப்பானையிலிட்ட அஸ்திகள் யாவும் பூக்களாக மாறி நறுமணம் பரப்புவதைக் கண்டு யாவரும் பிரமித்தனர். அதுமாத்திரமன்று; அஸ்தி குலுங்கிய பானையை யேந்தி ஊர் எல்லையைத் தாண்டியதுமே பூக்களும் மணத்துடன் மறைந்தன. இத் தல விசேடத்தால் இது நிகழ்ந்தது என உணர்ந்த அப் பெரியார் அலுவல் முடிந்து ஊர் திரும்பியதும் முதல் காரியமாக இத்தலத்தே தன் இஷ்ட தெய்வமான அம்பல வாணரையும் சிவகாமியையும் தாபித்தனராம். இதை நிரூபிக்க அர்ச்சகர் தன் நினைவுக் கெட்டிய் காலத்தில் மூலவரைச் சிதம்பரரேசர் என்றே அர்ச்சிப்பது வழக்கம் என்றும் கூறுகிறார். அங்கம் பூத்ததனால் அங்கம் பாக்கம் எனப் பெயர் கொண்டது இவ்வூர்.

தில்லைக்காரரால் தாபிக்கப்பட்டதால் இந்த அம்பல வாணரும் சிவகாமி அம்மையும் தனிப் பெருமை கொண்டனர். முன்பெல்லாம் எல்லா ஊர்களிலும் வீற்றி ருக்கும் நடராசப் பெருமானுக்குத் திருவாதிரை தினத் தன்று திருமஞ்சனமாட்ட தில்லை அந்தணர்களைக் கூப்பிடுவது வழக்கமாயிருந்தது. ஒரே தினம் திருமேனி யைத் தீண்டுவதே சிறப்பென்றால் அத் திருமேனியையே தாபித்தல் எத்துணை சிறப்பாகும்.

**ஊரும் பேரும்**

செங்கல்பட்டிலிருந்து பாலாற்றை யொட்டி காஞ்சி செல்லும் சாலையில் வாலாஜாபாத்தில் இறங்கி எதிரே யுள்ள பாலாற்றைக் கடந்தால் இவ்வூரை அடையலாம். ஆற்றின் பரப்பை நிரப்புவது நீரல்ல; மணல் தான். ஊரை யொட்டி சிறு பாம்பு நெளிவதுபோல் சன்னமாய்ப் பாயும் ஊற்று, கரை மருங்கில் அகலமும் ஏற்ற உயரமும் கொண்டு சலசலக்கும் அரசமரங்கள், நிழல் பிடிக்க

ஓங்கிய தென்னைகள் இல்லைழத்துள்ளதால் வேனிலின் வெம்மைபுகா இக்கிராமத்தில் இப்பொழுது மூன்று கோயில்களுள்ளன.

ஒன்று அம்பலவாணருடையது. இரண்டாவதைக் கல் வெட்டுகள் வாணீசுவரர் என்று விளம்புகின்றன. மூன்றாவது ஒரு கருவறை மட்டுமே கொண்ட பெருமாள் கோயில். வாணீசுவரமுடைய நாயனார் எனக் கல்வெட்டுகளால் அறியப்படும் வாணீசுவரர் ஆலயம்தான் மிகப்புராதன மானது. பெருமாள் கோயிலிலுள்ள விஷ்ணு பல்லவ அல்லது முற்காலச் சோழற்காலத்தியது என்பதை அதன் பிரயோக சக்கரமும், கிரீட அமைப்பும், ஆடை மடிப்பும் தெளிவாய்ப் புலப்படுத்துகின்றன. கவனிப்பின்றிச் சிலாரூபம் மிகவும் பழுதாயுள்ளது. அதேபோல் வாணீசுவரர் கோயிலும் இடிந்துவிட்டது. தில்லைவாசியால் நிறுவப்பட்ட அம்பல வாணர் கோயில் சிலமாகிவிட, அங்குள்ள மூர்த்திகள் பல்வேறு இடங்களைத் தேடி அமர்ந்து விட்டனர் போலும். இடிந்த கோயிலின் கற்கள் கொண்டு எழும்பியவை இன்று காட்சியளிக்கின்றன. கல்வெட்டுகள் மூலம் தன் பழமையையும் பெருமையையும் வெளியிட்டு நிற்கும் வாணீசுவரர் கோயில்தான் அம்பலவாணர் கோயிலாக இருந்திருக்க வேண்டும். அம்பலவாணர் வாணீசுவரராகத் திரிந்திருக்கலாம். அதற்கேற்பத் தற்பொழுதுள்ள அம்பல வாணர் கோயிலின் அம்பலவாணர், சிவகாமி அம்மை தனி அம்மன் யாவும் பூமிக்கடியிலிருந்து கிடைத்ததாம்.

### ஆலயமும் சரித்திரமும்

முதலாம் இராசராச சோழன் காலத்தே மேன்மை யுடன் விளங்கிய வாணீசுவரர் கோயில் இன்று பாழடைந் துள்ளது. ஊத்துக்காட்டுக் கோட்டத்து தேவதானமான இவ்வூரில் இக் கோயிலுக்கு ராசகேசரி ராசராசன் காலத்தே விளக்குகள் எரிப்பதற்கு ஆடுகள் வழங்கப்பட்ட செய்தி யைத் தாங்கும் தூண்கள் தேய்ந்து உருமாறிவிட்டன.

அருண்மொழித் தேவனுக்கேற்பட்ட சிறப்புப் பெயர்கள் பலவற்றுள் இராசராசன், மும்முடிச்சோழன் என்பவை சில. இம் மன்னனின் சில படைத் தலைவர்கள் உள்ளத்தாலும், புறத்தாலும் இவ்வரசனுக்குரியவர்கள் என்பதைப் புலப்படுத்த 'மும்முடிச்சோழ', என்ற கௌரவப் பெயரை ஒட்ட வைத்துக்கொண்டனர். தஞ்சை இராசராசேச்வரத்துத் திருச்சுற்று மாளிகையைக் கட்டியவன் படைத் தலைவனான மும்முடிச்சோழ பிரமாதிராயன்தான் அங்கம்பாக்கத்தருகேயுள்ள திருமுக்கூடலில், தனக்குச் சிவபக்தியூட்டி வளர்த்த பாட்டி செம்பியன்மாதேவி பெயரால், மன்னன் இராசராசன் திருமண்டபம் நிறுவியதைக் கண்ட இப்பிராந்தியப் படைத் தலைவன் மும்முடிச் சோழ வாணப்பேரரையன் அவகால மல்லன், வாணீசுவரர் ஆலயத்திற்கு ஒளி ஊட்ட வழி செய்தான் என்பதையே தூண்களின் சாசனம் செப்பும். இக் கோயில் குலோத்துங்கன் காலத்தே செப்பனிடப்பட்டது; சடையவர்மன் சுந்தர பாண்டியன் காலம் வரை சுமார் நான்கு நூற்றாண்டுகள் பீடுடன் விளங்கியதை அறிகிறோம். தினம் இரண்டே குடம் நீர் திருமஞ்சனத்திற்களிக்க ஊதியமாக 96 குழி நிலம் மான்யமாய் விடப்பட்டதென்றால், அக்காலத்தில் தேவ கன்மிகள் பணி எவ்வாறு போற்றப் பட்டது என்பதும் விளங்கும்.

மேற்கேயுள்ள பெரிய கோயில்தான் இப்பொழுது அம்பலவாண ராலயமாயுள்ளது. இரண்டு பெரிய பிரகாரங்கள் கொண்டு இரு நுழைவாயில்களுடன் விளங்குகிறது. மேற்கு உட்பிராகாரத்தில் தனி அம்மனாய் வீற்றிருக்கும் சிவகாமி விக்கிரகம் எழில் வாய்ந்தது. சிவனின் காமி என்றாலே எழில் வடிவினளாய்த்தானிருக்க வேண்டும். அத்துடன் 'சுந்தரி' என்ற அடைமொழியும் சேர்ந்து 'சிவகாம சுந்தரி' என்ற பெயர் கொண்டுள்ளாள். அழகுப் பிழம்பு என்றுதான் கூறவேண்டும்.

தில்லையில் பல்லவசிம்மவர்மன் ஆதித்தசோழன், குலோத்துங்க சோழன் இருவர், இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் இப்படிப் பல மன்னர்கள் போட்டியிட்டு பொன் வேய்ந்து பொன்னம்பலவாணனாக்கினர். அதன் அருகிலேயே சித்ரகூடமென்று பெருமாள் கோயிலையும் நிறுவி, தெற்றியம்பலமாக்கிப் பல்லவனும் வழிபட்டான். "பைம்பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து கடை மன்னவன் பல்லவன் கோன் பணிந்து'' என்பது பெரிய திருமொழி. அதேபோன்று இங்கும் சிவனுக்கும் பெருமாளுக்கும் உரிய அம்பலங்கள் கிலமாகிவிட்டன. அக்கால மூர்த்திகள் அதிர்ஷ்டவசமாய் நல்லபடியாக யுள்ளன. எல்லோருக்கும் உண்டு இலையும் பழுப்பும் என்பது பழமொழி. அதை நிதர்சனமாக இங்குக் காண்கிறோம். சிறிது சிரத்தை ஏற்பட்டாலே போதும்; கோயில் உன்னத நிலை எய்தும்.

சமய உணர்ச்சியையும் கலையார்வத்தையும் மாத்திரம் பெருமையாகக் கொண்டதல்ல இவ்வூர். இலக்கியப் புலமைக்கும் வித்திட்டது இம்மண். தமிழ் அறிஞர் பரமசிவானந்தம் இவ்வூர்க்காரர்தான்.

நன்றியுடன்
(தினமணிச் சுடர்)
—25-3-1979

# தில்லையும் அங்கம்பாக்கமும்

## (தில்லை கும்பாபிடேக மலர் 1979)

அ. மு. பரமசிவானந்தம்

என்னை நான் உணராத அந்த இளமைக்காலம்; நான் எங்களூர் ஆரம்பப் பள்ளியில் பயிலத் தொடங்கிய இளமைக்காலம். அப்போது எங்கள் வீட்டின் பின்பக்கத்திலேயே உள்ள அம்பலவாணர் கோயிலுக்கு அடிக்கடி செல்லுவேன். மாலையில் பாலாற்று மணலில் விளையாடி விட்டு, ஊற்றுநீர்க் கால்வாயில் துப்புரவு செய்து கொண்டு அப்படியே கோயிலுக்குச் சென்று அம்பலவாணரையும் அன்னை சிவகாமியையும் தரிசனம் செய்துகொண்டு வீடு திரும்புவது வழக்கம். மாலைவேளை அபிடேக ஆராதனை அனைத்தும் என் பாட்டனாரால் மானியம் விடப்பெற்று நடத்தப்பெறுவதாகும். எனவே ஆராதனை முடியும் மட்டும் இருந்துவருமாறு என் அன்னை பணிப்பார்கள். அந்த மாலை ஆராதனையின் முடிவில் அர்ச்சனை செய்யும் போது வயது முதிர்ந்த ஐயர் 'சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வர சுவாமி நம' என்று கூறி முடிப்பார். என் பிஞ்சு உள்ளம் அதைப்பற்றி அன்று பெரிதாக எண்ணாவிட்டாலும், 'அம்பலவாணர்' என்று சொல்லாமல் வேறு பெயரைச் சொல்லுகிறாரே என நினைக்கும். பிறகு சில ஆண்டுகள் கழித்து — சற்றே தெளிவு வந்த பின் அம்பல

வாணர்தாம் சிதம்பரேசர் என்ற உண்மையை உணர்ந்தேன். மேலும் சிதம்பரத்துக்கும் எங்கள் ஊருக்கும் உள்ள தொடர்பினைப் பற்றிப் பெரியோர்கள் சொல்லக் கேட்டறிந்தேன்.

என் ஊரின் சூழலும் கோயில் அமைப்பும் ஆற்று மணலும் நீரோடையும் என் இளமைக்காலத்தில் அடிக்கடி என்னைக் கோயிலுக்குச் செல்லத் தூண்டும். எங்கள் ஊர் இன்று அங்கம்பாக்கம் என்று இருந்தாலும் அது இரண்டு ஊர்கள் இணைந்த ஒன்று என்றே பெரியவர்கள் சொல்லுவார்கள். ஊரின் மேற்பகுதியே 'அங்கம்பாக்கம்' என்றும் நான் இருக்கும் கீழ்ப்பகுதியாகிய ஒரே தெரு 'வான்பாக்கம்' என்றும் தனியாக இருந்து, பிறகு ஒரு காலத்தில் இணைய 'அங்கவான்பாக்கம்' என்று பெயர் பெற்று, கடைசியில் அங்கம்பாக்கம் என்ற பெயரே நிலைத்துவிட்டது என்பர். சில பழைய ஆவணங்களிலும் 'அங்கவான்பாக்கம்' என்றே இருப்பது அதற்குச் சான்றாகும். மேலும் ஊரில் நடைபெறும் மாரியம்மன் காப்புக் கட்டும் விழாவின் கடைசி நாளுக்கு முன்னர் நடைபெறும் தெருக்கூத்தில், அக்கூத்து நடத்துபவரின் தலைவன் வீடுதோறும் தரும் பரிசை ஏற்று 'இவ்வங்கம்பாக்கம் வான்பாக்கம் கிராமம்' என்று சொல்லிப் பிறகு வாழ்த்துவது மரபாக இருந்தது. கோயில்களின் அமைப்புகளும் பிற திட்டங்களும் இந்த இரு ஊர் அமைப்பினை உறுதி செய்கின்றன.

இரண்டு சிவன் கோயில்கள், இரண்டு பெருமாள் கோயில்கள் (சந்நிதி), இரண்டு பிள்ளையார், மாரி, பிடாரி கோயில்கள் தனித்தனியாக இருப்பதோடு, ஊர்த் தொழிலாளர்களும் இரண்டு பிரிவாகவே உள்ளனர். இன்றும் இந்த உண்மைகளைக் காணலாம். வான்பாக்கத்துக்குரியதே கிழக்கே ஊர் எல்லைக்கு வெளியேயுள்ள வாணீஸ்வரர் கோயில். அதை அடுத்தே பெருமாள், பிள்ளையார், பிடாரி, மாரியம்மன் கோயில்களும் உள்ளன.

இச் சிவன் கோயில் சோழர் காலத்தியது. ஊர் இரண்டும் இணைந்தபோது, இதிலுள்ள சில சிலாவிக்கிரகங்களை அம்பலவாணர் கோயிலில் கொண்டுவந்து வைத்து ஆண்டவனையும், 'அம்பலவாணீஸ்வரர்' என்றே அழைத்தார்கள். எனினும், ஊரின் பெயரைப்போலவே இறைவன் பெயரும் 'அம்பலவாணர்' எனவே அமைந்துவிட்டது.

கிழக்கே உள்ள வாணீஸ்வரர் கோயிலின் சிதைந்த கற்களின் மேல் நான் நண்பர்களுடன் பல நாட்களில் மாலைப் பொழுதினைக் கழித்ததுண்டு. அப்போது அக் கோயிலின் சுற்றுச் சுவர்களிலுள்ள கல்வெட்டுக்களைப் பற்றி எண்ணியதுண்டு. எனினும் படிக்கத் தெரிவதில்லை. பின் தொல்பொருள் ஆய்வுக்குழுவினர் அவற்றைப் படி எடுத்துள்ளனர் என்பதை அறிந்தேன். அக் கல்வெட்டுக்களைப் பற்றியும் அதில் நேர்ந்த கொடை நலம் பற்றியும் அண்மையில் தினமணி நாளிதழ் (சுடர்) கட்டுரை வெளி வந்ததைப் பலரும் படித்திருப்பர். (அதுவே திரு. சோமலெ அவர்கள் மூலமாக என்னை இக்கட்டுரை எழுத வழி செய்தது.)

கல்வெட்டின் வழி இறைவன் 'வாணீச்சுரமுடைய நாயனார்' என அழைக்கப் பெறுகிறார். இக்கோயிலுக்கு விளக்கு எரிப்பதற்கென, முதலாம் இராசராசன் காலத்தே ஆடுகள் வழங்கப்பெற்ற கொடையினை விளக்கும் கல்வெட்டினைத் தாங்கிய தூண்கள் நிலைமாறிவிட்டன. இராசராசன் படைத்தலைவனும் தஞ்சைப் பெரியகோயில் திருச்சுற்று மாளிகையைக் கட்டினவனுமாகிய மும்முடிச் சோழப் பிரமாதிராயன் வழியே பக்கத்தில் உள்ள திருமுக்கூடலில் 'செம்பியன்மாதேவி' பெயரால் அமைந்த இராசராசன் மண்டபத்தைக் கண்ட இப்பிராந்தியத் தலைவன் மும்முடிச் சோழவாணப் பேரரையன் இவ்வாணீச்சுரர் கோயிலுக்கு ஒளி விளக்கு அமைக்க ஏற்பாடு செய்தான் போலும். பின் இக்கோயில் குலோத்துங்கனால் செப்பம் செய்யப்பெற்று நான்கு நூற்றூண்டுகள் சிறக்க இருந்தது.

இவை எல்லாம் கனவாகிக் கழிய இன்று சிறு ஒதுக்கிடமாகக் கேட்பாரற்று இக்கோயில் இருப்பதை எண்ணி வருந்த வேண்டியுள்ளது.

அம்பலவாணர் கோயில் இன்று சிறந்துள்ளது. பெருங் கோயில்களில் நடைபெறும் அத்தனை விழாக்களும் நித்திய பூசைகளும் (மூன்று காலம்) குறைவின்றி நடைபெறுகின்றன. சித்திரையில் நடைபெறுகின்ற பெருவிழாவாகிய 'பிரம்மோற்சவம்' பல ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப் பெற்றது. ஆண்டில் பல ஆயிரங்களுக்கு மேல் வருவாயினை உடைய இக்கோயில் இன்னும் நன்கு பராமரிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

இனி, இக்கோயிலுக்கும் ஊருக்கும் தில்லைக்கும் அம்பலத்துக்கும் உள்ள தொடர்பினை எண்ணிப் பார்க்கலாம். அம்பலவாணரும் சிவகாமியும் இணைந்து தோற்ற மளிக்கும் இடங்கள் இவ்விரண்டுமாகும். அம்பலம், வான் என்ற இரு சொற்களும் தில்லை இறைவனைச் சுற்றி அமைந்த வெட்ட வெளியினைக் குறிப்பனவாகும். தில்லை அம்பலமாகிய 'ஆகாய' த் தலத்தினைப்போன்றே இங்கும் ஊரும் கோயிலும் அந்த அழகிய பெயர்களைக் கொண்டு விளங்குகின்றன. இவ்வூர்க் கோயிலின் மூலத் தானத்தைச் சுற்றி, ஆகாய நிலை உள்ளமையினைச் சுட்ட ஆறடி அளவில் பரந்த திறந்த வெளியிருந்தது. ஆனால் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்தான் (பலர் அதில் தெரியாமல் வீழ்ந்து விடுகிறார்கள் என்ற காரணத்தால்) மூடப் பெற்றது. எனவே தில்லையைப் போன்றே இதுவும் பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய—பிற பூதங்களை உள்ளடக்கிய ஆகாயத்தலமாக விளங்கிற்று— விளங்குகிறது. வான் பாக்கம் என்ற பெயரும் அதை வலியுறுத்துவதாகும்.

இங்குள்ள மூலவருக்குமட்டுமின்றி நடராசருக்கும் தனிச்சிறப்பு உண்டு. தில்லையில் நடக்கும் ஆறு பெரிய அபிடேகங்களைப்போன்றே இங்கும் உரிய நாட்களில் அபிடேகம் நடைபெறும். தில்லையில் அம்பலவனை முன்

மண்டபத்தும் ஆயிரக்கால் மண்டபத்தும் எழுந்தருளி வித்து திருமஞ்சனம் செய்வது போன்றே இங்கும் வேறு தனி மண்டபத்தும் திருவாதிரையில் பெருமண்டபத்தும் வைத்துத் திருமஞ்சனம் செய்வது இன்றும் வழக்கமாக உள்ளது.

திருவாதிரை நாளில் நடராசர்தம் அபிடேகம் விடியல் நான்கு மணி அளவில் முடிய, அடுத்து அவரை வெள்ளுடை யிலும், பின் செவ்வுடையிலும் அலங்கரித்து, கோயிலை வலம் வந்து, வெட்ட வெளியில் நிறுத்தி வழிபாடாற்றும் வழக்கம் இன்றும் உண்டு. அதன் பொருளினை நான் என் இளமையில் எண்ணிப் பார்க்க இயலாவிடினும் பின் எண்ணிக் கணக்கிட்டதுண்டு. ஆம்! வான வெளியாய்—மோனத் தொளியாய்— அப்பாலுக் கப்பாலாய் உள்ள ஆண்டவன் பெருநிலையினை முதலில் வெள்ளுடையில் வணங்கவும் பின் அதே ஆண்டவன் உலக உயிர்கள் உய்யும் பொருட்டு, ஆடல் இயற்றி 'சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மானாய்'க் காட்சியளிக்கும் பான்மை யினைச் செவ்வுடையில் வணங்கவும் இந்த முறையினை—வழிபாட்டினை ஏற்பாடு செய்துள்ளார்கள் என உணர்ந் தேன். அம்பலவன் தன்மையினை இவ்வழிபாடு நன்கு காட்டுகிறதன்றோ!

அத் திருவாதிரை நாளில் தில்லையைப் போன்றே இவ்வூரும் விழாக்கோலம் பூண்டு நிற்கும். அனைவரும் தூய உடையும் உள்ளமும் கொண்டவராய் வரிசை வரிசையாகக் கோயிலுக்குச் சென்று வழிபாடாற்றுவதோடு, தத்தம் தெருவுதொறும் அம்மையையும் அப்பரையும் நிறுத்தி மண்டகப்படி செய்யும் காட்சி இன்றும் கண்கொள்ளாக் காட்சியேயாகும். திருவீதி உலாவின் இறுதியிலே, அம்மனைத் தெருவின் ஒரு கோடியிலும் இறைவனை மற்றொரு கோடியிலும் நிறுத்தி, அம்மன் ஊடல் கொண்டதாகக் காட்டி, இவ்வூடலைத் தீர்க்கும் வாயிலாக 'ஆலாலசுந்தரை'க் கொண்டு நிறுத்தி, அவர்

வழி ஊடல் நீங்கிய அம்மை அப்பர் இருவரும் திருக் கோயிலுக்கு எழுந்தருளும் காட்சியும் சிறந்ததாகும். சுந்தரருக்கு இறைவன் தூது சென்றதைத் தவறு எனக் காட்டிய ஒரு நாயனாருக்கு இறைவனே பதில் தந்ததாகப் பெரியபுராணம் கூறுகின்றது. அப் பெரியபுராணம் இயற்றிய சேக்கிழார் பிறந்த அதே தொண்டை நாட்டில், அவர் மரபினர் இன்றும் சிறக்க வாழும் அங்கம்பாக்கத்தில், இறைவனைத் தூது அனுப்பியதற்குக் கழுவாயாகச் சுந்தரர் தாமே தூது சென்று அம்மையப்பரை இணைத்து வைக்கும் நிலை சிறக்க அமைகின்றது. இக்காட்சி ஒப்பற்ற உயரிய நற்காட்சியாகும்.

இனி, ஒருவகையில் இவ்வூரினைத் தில்லையொடு இணைக்கும் செவிவழிக் கதையும் உண்டு. தில்லையில் வாழ்ந்த அந்தணர் ஒருவர் மறைய அவர் 'அஸ்தி' யை எடுத்துக்கொண்டு, அவர் மகனார் காசிக்குப் புறப் பட்டாராம். வழியில் ஒரு நாள் பொழுது சாய, இவ்வூரில் தங்கினாராம். இரவு கழிந்து மறுநாள் காலையில் கண் விழித்துப் பார்த்தபொழுது, அவருக்கு ஓர் அதிசயம் காத் திருந்ததாம். ஆம்! புதுப்பானையில் இருந்த எலும்புகள் அனைத்தும் பூக்களாக மாறி மணம்வீசத் தொடங்கிய தாம். அதுமட்டுமன்றி, அவர் அதிசய உளத்தொடு, மேலே சென்று இவ்வூர் எல்லையைக் கடக்க, அப் பூக்களும் பிறவும் மறைந்தனவாம். இவை அனைத்தும் இவ்வூர்த் தல விசேடமே என அனைவரும் போற்றிப் புகழ்ந்தார் களாம். தில்லை அந்தணரும் உடனே மேலே செல்வதை நிறுத்தி, இத்தலத்தையே காசியாகக் கருதி இங்கேயே தந்தையாருக்குரிய கடனை முடித்ததோடு தில்லையில் உள்ள அம்பலவாணரையும் சிவகாமி அம்மையையும் இவ்வூரிலே தாபித்து வழிபட்டு வந்தாராம். அங்கம் (எலும்பு) பூத்ததனால் இவ்வூர் அங்கம்பூத்தூர் என வழங்கப் பெற்று பின் பக்கத்தில் பல பாக்கங்கள் உள்ளமை போன்று இதுவும் அங்கம்பாக்கம் என மாறிற்று என்று

கூறுவர். வான்பாக்கம் அங்கம்பாக்கத்தோடு இணைந்த காலமும் வாணீஸ்வரர் அம்பலவாணீஸ்வரரான காலமும் இதை ஒட்டியதாக இருக்கலாம் எனக் கொள்ள இடமுண்டாகின்றது. மேலும் இவ்வாய்மொழியினை வெறும் கதையாகக் கொண்டாலும், இதன் வழியே தில்லைக்கும் இவ்வூருக்கும் உள்ள தொடர்பு மறுக்க முடியாததாகும். நான் முன்னரே காட்டியபடி, இதனாலேயே வடமொழி வாணர்கள் தம் தோத்திர முடிவில் இங்கே அம்பலவாணரை, 'சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர்' என்றே கூறி வழிபடு நெறியினை இன்றும் காணலாம்.

மேலும் மற்றொரு கதை வழங்கி வந்துள்ளது. இங்குள்ள நடராசர் சிலையே சிதம்பரம் கோயிலிலிருந்தே—யாருக்கும் தெரியாமல் கொண்டுவரப்பெற்றது என்பர். சிதம்பரம் திருக்கோயிலுக்கு எனச் செய்த இச்சிலையினை இவ்வூர் வேளாளர்கள் பற்றின் காரணமாக எப்படியோ பற்றிக்கொண்டுவர, பிறகு தில்லையில் வேறு சிலை செய்யப் பெற்றதாகவும் கூறுவர். இவை அனைத்தும் உண்மையோ இல்லையோ — இவற்றால் இரு ஊர்களுக்கும் உள்ள தொடர்பு தெளிவாகின்றது உண்மையாகும்.

அம்பலவாணர், சிவகாமி, நடராசர் ஆகிய விக்கிரகங்கள் அழகிய வடிவினைக் கொண்டுள்ளன. மங்காத பொன்னார்மேனியுடன் இன்றும் என்றும் காட்சியளிக்கும் இத்திருவுருவங்களை எப்போதும் கண்டுகொண்டிருக்க வேண்டும் என்ற உணர்வு, காணுவோர் யாருக்கும் தோன்றும் என்பது துணிபு.

இவ்வூர் முன்பு தொண்டைமண்டலத்து ஊற்றுக்காட்டுக் கோட்டத்தைச் சேர்ந்திருந்தது. பின் களத்தூர்க் கோட்டத்தைச் சார்ந்த குறும்பறை நாட்டு உட்பிரிவில் இருந்தது. செங்கற்பட்டு மாவட்டம் அமைத்தபோதும் (ஆங்கிலேயர் ஆட்சியில்) இது முதலில் மதுராந்தகம் வட்டத்தில் இருந்து, பின் காஞ்சிபுரம் வட்டத்திற்கு மாற்றப்பெற்று இன்றளவும் அவ்வட்டத்தில் உள்ளது.

தூரத்தே இருந்து தரிசிக்கச் சிதம்பரத்தைப் போன்று தூல லிங்கங்களாகிய கோபுரங்கள் பெரும் அளவில் இவ்வூரில் இன்றெனும், பாலாற்றங்கரையில் தென் பக்கத்தில் ஆற்றின் கரைமேலேயே அழகுற இக்கோயில் அமைய, ஆற்றின் வடகரையினை ஒட்டிச் செல்லும் சாலையிலும் இருப்புப்பாதையிலும் செல்வார் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் சிறந்துள்ளது. இவ்வூரின் வடக்கே பாலாறும் தெற்கே சேயாறும் பாய்ந்தோடி, கிழக்கே ஒரு கல் தொலைவில் திருமுக்கூடலில் கலக்க, இவ்வூர் மடுவும் அவற்றொடு கலந்து முக்கூடல் என்ற பெயரை உண்மையாக்குகின்றது. இந்த நிலையினை எண்ணித்தான் போலும் சோழர்குல மக்களும் அவர்தம் உயர் அதிகாரி களும் இந்த இரண்டு ஊர்களிலும் ஆலயப்பணிகளையும் அறப்பணிகளையும் செய்தனர் என நினைக்க வேண்டி யுள்ளது.

எனவே இவ்வூர் தொன்மைவளம் சான்றதோடு, தெய்வமணம் பரப்பும் வரலாற்றுப் பின்னணியும் கொண்டு தில்லையை ஒத்து விளங்குகிறது. தில்லையைச் சுற்றியுள்ள இயற்கைவளம் இங்கும் உண்டு. வாழை, தென்னந் தோட்டங்களும் அடுத்து வயல்வெளியும், இவ்வயல் வெளிக்கு நீரூட்டும் வாய்க்கால்களும் இங்கு வருவோருக்குச் சோழநாட்டையும் சிறப்பாகத் தில்லையையும் நினை வூட்டும் என்பது உறுதி.

இவ்வாறு 'வடதில்லை' எனப் போற்றத்தக்க இந்த அங்கம்பாக்கம் இயற்கையொடு இறைநலமும் சார்ந்த ஓரூர் என்பதும், தொன்றுதொட்டு வேளாண்மக்கள் வாழ்ந்து வருகின்ற ஊர் என்பதும், தற்போது ஓரளவு ஒளி மழுங்கி இருந்தபோதிலும் உள்ளவர் ஒன்றுபட்டுச் செயலாற்றின் உயர்ந்து ஓங்கிப் பண்டை நலம் பெறும் வாய்ப்பு உள்ளது என்பதும் அறிந்த உண்மைகளாகும். தில்லையினைப் போன்றே இவ்வூரும் எல்லா நலன்களையும் பெற்றுச் சிறக்க என்ற வாழ்த்தோடு அமைகின்றேன்.

உ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அங்கபுரத்தம்பலவாணமாலை.

இஃது,

திருக்கழுக்குன்றம்

சண்முகபுராணிகரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை:

ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1900.

முதற்பதிப்பின் முகப்பு

# சாத்துகவிகள்.

இஃது,

கந்தபுராணம் திருவிளையாடல் முதலியவற்றிற் குரையாசிரியரும்
சிவபராக்கிரமம் ஹரிஹரதாரதம்மியம் முதலியவற்றின்
நூலாசிரியருமான சைவஶ்ரீ

## ம-தி-பானுகவி அவர்களால்

சொல்லப்பட்டது.

அங்கபுரத் தெங்கையா மம்பலவன் றேட்கிசைத்த
சங்கத் தமிழ்மாலை தன்னைப்போற்—றுங்கநூல்
காங்கண்ட தில்லையென நாமுரைத்தற் கென்னதடை
ஈங்குள்ள தன்றே விது.

சீரார்ந்த வங்கநகர்ச் செல்வர்க் கொருதுணையா
மேரார்ந்த கோவி லிறைவன்மேற்—பேரார்ந்த
சங்கத் தமிழ்மாலை தன்னைப்போ லோர்தமிழ்ப்பா
வெங்குமிலை யென்பே மியாம்.

---

இஃது,

ம-ா-ா-ஶ்ரீ, சாத்தம்பாக்கம்

## அரங்கநாத முதலியாரவர்களால்

சொல்லப்பட்டது.

செஞ்சோலேவான்கரும்பாத்தேறவளர்க்கழனிபலசெறிந்துசூழ
வஞ்சொலார்பச்சையுடையார்க்கெதன்னவிளங்குமெழிலங்கம்பாக்கத்
திஞ்சொலாரம்பலவன்றேண்மாலைதனைப்போலவெழில்வாய்நூலை
நஞ்சொலாலுண்டென்னப்புகலமணநமக்கில்லைநன்குதானே.

முதற்பதிப்பின் சாத்துகவிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# அங்கபுரத்தம்பலவாண மாலை

## வெண்பா

அங்கநகர் துன்னுமெழி லம்பலவன் பேரானற்
சங்கத் தமிழ்மாலை சாற்றவருட்—பங்கி
லறமார் சிவமா ரபிராமி யீன்ற
விறையாங் கணபதியை யெண்.

## நூல்

---

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

மங்கல முரஞ்சே ரண்ணல் மாயோகி
மாண்புரை வேணி மாமுனிவ
ரங்கக லாது நிரந்தர மேத்து
மருளொளிக் கைலை மாமலையின்
இங்கித நண்பா மிமைய மாமலையி
னிளங் கொடிஎனுஞ் சிவகாமி
யங்கணுக் கினியா யங்கமா நகர்வா
ழம்பல வாண மாமணியே (1)

ரேிலா வேட்கை நிறைந்துநின் றழுத
நீள்புகழ்த் தோணிமா புரத்தா
ராரியற் கமுதீந் தகவிளக் கேற்றி
யருளெழி னீற்றினை வளர்த்த
காரிருங் கூந்தற் கமலையே முதலோர்
கைதொழு மெழிற்சிவ காமி
யாரிருஞ் செல்வத் தங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே. (2)

சுத்தவத் வைத சைவமா தவத்தைச்
சோர்வுறா வாலிதர் வைகு
நித்தரை சீர்த்த பாலிமா நாட்டி
னிலவிய வெழில்வளஞ் சேர்க்க
வைத்தமா கருணை வல்லியா மெங்கள்
வாள்விழி யருட்சிவ காமி
யத்தனே யெழில்சே ரங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (3)

பூதலத் திடையார் சரவணத் தடத்துப்
புண்ணிய வண்டடற்செய் குழகன்
வேதநன் முறையால் வல்லிகுஞ் சரியை
வேட்டருள் மணவறை மானுங்
கோதறு வளங்கள் விளங்கிட வமைத்த
கொடியிடை யெழிற்சிவ காமி
ஆதரித் தருளு மங்கமா நகர்வா
ழம்பல் வாணமா மணியே (4)

மண்ணினி லைந்தாய் நீரினி னான்காய்
மருவியு மவையல வான
விண்ணினி லொன்றாய் வேறுவே றாகி
விளங்கியுந் தெய்வத மறையி
னெண்ணிலா வருள்செய் திருசிவ காமி
யிணைந்திடு ஞானவான் பெருக்கா
மண்ணலே யெழில்சே ரங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (5)

கார்முகம் பொருவு நுதலணி மென்றோட்
கதலியந் தொடைமட மானாய்
ஆர்கலி யுலக மனைத்துமீன் றருளி
யன்புட னாதரித் தருளுஞ்
சீர்த்தனை யலர்மே லுறைபவன் முதலோர்
செறிதர வருள்சிவ காமி
யார்தரு மெழில்சே ரங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (6)

பேதமை யெய்து மடிமையின் கொள்கை
பேசினே னவ்வுரை கேளா
யாதனை யெய்துந் தோகைய ரிச்சை
யழிதர வாரரு ளார்க்கும்
போதனை சொன்ன புண்ணிய முனிவர்
போற்றல ரடிச்சிவ காமி
யாதரித் தருளு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (7)

திருவுலாம் பொறையு மளக்கருங் கற்புந்
தீண்டிடா வண்ணமுந் திண்ண
மிருநில மடந்தை மதிமுக மென்ன
விசைந்திடும் பாலிமா நாட்டின்
மருவினோர் செய்தப் புண்ணியப் பேறாய்
மன்னரு ளெழிற்சிவ காமி
யருவிலா துறையு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (8)

அன்பரி னுள்ளத் தவாப்பெருக் கறுத்தங்
கருண்மழை யெனவிழிக் கடையா
லின்புறா மலமா மடவியை பொடித்திட்
டிலங்கருண் ஞானமா வமிர்தைத்
துன்பிலா தூட்டுந் துடியிடை மடமான்
றோகையா மெழிற்சிவ காமி
யன்புட னமர்ந்த வங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (9)

பழுதையை நோக்கி யரவென வெருண்ட
　　பான்மைபோற் பேதையர்க் கெட்டா
முழுதையுந் தெளிந்த சைவசித் தாந்தர்
　　முகமலர்ந் தன்புட னேத்தும்
பழுதறு பரையா யிலங்கிய நலங்கொள்
　　பான்மொழி யெழிற்சிவ காமி
அழுதிட லகற்று மங்கமா நகர்வா
　　ழம்பல வாணமா மணியே (10)

ஒளியுமிழ் பளிக்கிற் குயிற்றிய மாடத்
　　துயர்கொடி விண்ணவன் பொற்றே
ரொளிர்பரி யினத்தைப் புடைப்பன வன்னோ
　　னுச்சியிற் றடங்கர மேற்றும்
பளகறு சிகரக் கோயிலி லார்ந்த
　　பான்மொழி யெழிற்சிவ காமி
யளிதிருக் கருணை யங்கமா நகர்வா
　　ழம்பல வாணமா மணியே (11)

திரிபுரை வாலை புவனைநீ யென்னச்
　　செப்பியே நிட்டையி னிலைத்தோர்
பரிபுர வொலியை மனஞ்செவி தேக்கிப்
　　பண்ணவர் குழுவினி லார
விரிதரு கருணை யிளநில வெறிக்கும்
　　வியன்முகத் தெழிற்சிவ காமி
யருள்புரி கருணை யங்கமா நகர்வா
　　ழம்பல வாணமா மணியே (12)

வானமீன் கொழுந னுற்றவெம் பசியை
　　மாற்றிய சுரபியை மானு
மானபேர் வாய்ந்த பல்வளப் பாலி
　　மன்னிய தொண்டைமண் டலத்து
வீனமி லறங்க ளானவை யெவையு
　　மியற்றெழி லருட்சிவ காமி
யானவ ளுறையு மங்கமா நகர்வா
　　ழம்பல வாணமா மணியே (13)

பாட்டளி முரலு மதுமலர்ப் பிணையல்
பயிறடந் தோளுமை யெழில்சேர்
வாட்டமில் நறிய கொங்கையங் குவட்டில்
வைத்தருள் விழிக்கடை யதனாற்
பூட்டுவின் மதனை முருக்கிய திறம்போற்
போதமி லென்வினை பொடிப்பாய்
ஆட்டயர்ந் தென்று மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (14)

ஆதர மவத்தை யைந்துடன் வெய்ய
வகந்தை மெய்பொறி புலனாதி
சாதனை யுற்றுச் சந்திர னொளியைச்
சரதமாய்க் கண்டவர் தமக்குள்
வேதனை யென்ப துன்னுறா தகல
விரட்டெழில் விழிச்சிவ காமி
யாதர வுடனா ரங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (15)

இந்திரன் முதலோ ரடிபணிந் தேத்து
மிணையறு வேதியர் குலத்தில்
வந்தசுந் தரனார் புகழும்வே ளாள
வண்குல வள்ளலர் போற்றுஞ்
செந்தளி ரடியார் திருவினைப் பயந்த
சேல்விழி யெழிற்சிவ காமி
யந்தர மெனவா ழரங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (16)

அஞ்சன முண்கண ளிவிழுந் தோறு
மடியவ ரகமல ரவிழும்
பஞ்சணி சரணத் தண்டையங் கலிப்புப்
படுந்தொறும் பழவினை பறக்குங்
குஞ்சர நடையாள் முனமென வடியார்
கூறெழி லருட்சிவ காமி
அஞ்சொலா லளிக்கு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (17)

செவ்வரி பரந்த மாதர்கண் வலையாற்
சிதைவுறு நாயினேன் மீது
பெள்வமுற் றெழுந்த வமிர்தென விளங்கும்
பண்புள விழிமல ரதனை
ஒளவிய மகல வைத்தருள் செய்த
வனநடை யெழிற்சிவ காமி
யவ்வருள் வளர்க்கு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (18)

சேலினேர் விழியாள் பாண்டிமா தேவி
திருவருள் பெறவருள் புரிந்த
கோலநற் காழி யண்ணலை யாண்ட
கோதறு ஞானவா னந்தப்
பாலினேர் மொழியா ளாஞ்சிவ காமி
பண்பினோ டிருந்தருள் புரியு
மாலையந் திகழு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (19)

கருவளா ராத வறிவுடை முதியோர்
கைதொழு தேத்துமா னந்த
விருமுனி வோர்கள் வணங்குமம் பலத்தி
லின்னடம் புரிவது போலப்
பெருகொளி மதிய மணிசடை கறங்கப்
பெண்ணுட னாடிய பெரும
வருகலில் செல்வத் தங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (20)

பெரியவான் றவத்து குறுமுனிக் குரவன்
பெயர்க்கொணா சுருதியைத் தமிழா
லுரியமா வமரர் செவியமு தாக
வுணவருள் தரவரு மொருவற்
புரிமலை மகளா மெழிற்சிவ காமி
புணரிடப் புறனுட னிலங்கி
யரியயர் பணிய வங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (21)

இறைமைசேர் பரம சுகமுறு மன்ப
ரியல்பினை யறிந்துநற் கனவில்
மறைமுடி வுரைத்து நிமலநல் லொளியாய்
மன்னியும் வேறெழில் வீட்டி
னுறைசுப மேய்ந்து நிற்கநல் லருள்செய்
யுமைசிவ காமியா ருடனே
யறைகழன் முழங்க வங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (22)

அங்கமா நகரை யெண்ணொணா தெண்ணி
லாழ்பவ மேழையுங் கடப்பா
ரங்கமார் வேதம் பன்முறை கிளர்ந்தே
யரற்றிடு மனுதினந் தொண்டைச்
சங்கையி னாட்டின் றிருசிவ காமி
சாற்றரு நிலைமையா லெண்ணு
மங்கமெய் திலனே யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே ... (23)

வாழையின் வண்ணக் கன்றுபோல் வளரும்
வசையிலாப் பகிரதி தந்த
மேழியின் செல்வ ருள்ளவைம் புலத்தை
மேன்மையாத் திருத்தி மாயோக
வாழிபோற் பெருக்குந் திருசிவ காமி
யகத்தினிற் றாண்டவ மாற்கன்
றாழியீந் தருளி யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (24)

தண்ணளி யதனா லண்ட கோடிகளைத்
தங்குறச் செய்தது மிமையன்
மண்ணியற் றவமோ மேனையி னோன்போ
மாறிலாப் புலவரைக் காக்கப்
பெண்ணொளி கொண்ட திருசிவ காமி
பேரறிவினுக் கியைந்த மாபிரம
வண்ணலே யெமையா ளங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (25)

அறிவினா லுரையா நன்மைநூற் கூறு
மந்தமில் வனப்பெலா மெய்தச்
செறிவளை மினலார்ந் தோதிசேர் கங்கைச்
செல்வியோ டிணங்கியே நாளும்
வரிவளைக் கரமார் திருசிவ காமி
வாழ்த்தொலி யெடுத்திட விடைமே
லரியயர் பணிய வங்கமா நகர்வா
ழும்பல வாணமா மணியே (26)

வித்தக மறையி னரும்பொரு ளுணர்ந்த
விண்ணவ ரிருஞ்சடை யறவோர்
சத்திய வாக்கால் வைகலும் போற்றும்
சதிர்பெருங் காமகோட் டத்தில்
நித்தியப் பொருளா யுறுஞ்சிவ காமி
நேயமோ டணைத்தருள் குரவ
வத்தமெங் கணுமா ரங்கமா நகர்வா
ழும்பல வாணமா மணியே (27)

காமர்பூ வல்லி யிரத்தின வல்லி
கவின்சொரி மரகத வல்லி
தாமனார்க் கிளைய சுந்தர வல்லி
தங்கவான் மலைவளர் வல்லி
சேமமா யுறையுந் திகழொளி மாடந்
தினகர மண்டில மளவு
மாமெழின் மிகுந்த வங்கமா நகர்வா
ழும்பல வாணமா மணியே (28)

ஆகம வல்லி நவமணி பாடு
மருட்பதத் தண்டையை யறிவா
லூகையா லுன்னச் செய்தினி மேல்வா
யுதிப்பினை மாற்றியின் புருவாஞ்
சாகர மதனி லடியரை யாழ்த்துந்
தண்ணருண் மிகுசிவ காமி
யாகர மிலங்கு மங்கமா நகர்வா
ழும்பல வாணமா மணியே (29)

யாக்கையின் னுயிர்போல் வைதிக நெறியை
யகன்புவி முழுவதும் வளர்த்த
வாக்கூர் குன்றை சேக்கிழா ரென்கோ
வகத்தினின் மகிழ்ந்த நற்பாலி
மோக்கமெய் நாட்டின் றிருசிவ காமி
மொழிந்திட வாழ்வுற வளரு
மாக்கமேய்ந் திலங்கு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (30)

விம்மிய கொங்கை விஞ்சையன் பேதை
விபஞ்சியின் மாடகந் திருத்தித்
தம்மித வன்பாற் கீதமென் றேநற்
றண்ணிய வின்செவி மிதப்பச்
செம்மையோ டிசைப்ப வாரருள் புரிந்த
திருந்திழை யெழிற்சிவ காமி
யம்மையா ருவந்த வங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (31)

கல்விவான் கடலை யகட்டிடை விடுத்த
கதிர்வடி வேன்முரு கெங்கோன்
புல்லிய வின்பத் தண்டமிழ் வேண்டிப்
புகழ்மிகு பான்முலை யீந்த
முல்லைமென் முறுவலு மைசிவ காமி
முளரியந் தளிரடி பணிவா
னல்லியந் தடமா ரங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே ... (32)

அறிவினாற் காய நிருமல மாக்கி
யகண்டரா வுணர்ந்திட நிட்டைக்
குறிகெடா திருந்து சித்தினை மதியாக்
கொள்கையர் கண்டிடுஞ் சோம
னெறிநிலா வணிந்த விளஞ்சடை மவுலி
யெந்தையே யெளியனை யாள்வா
யறிவினார் பரவு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (33)

பற்றறப் பற்றி யின்பமா யிருந்தோர்
பவத்தினை யொழிப்பது மன்றிக்
குற்றமே குணமா வுடையவர் தங்கள்
கொழுவினை கிளர்ந்திடு மென்ன
முற்றுரை செய்த திருசிவ காமி
மொய்குழ றனைநனி வேட்டெ
யற்றமில் செல்வத் தங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (34)

காழியன் பணிந்த பூழியன் கூடற்
காஞ்சனை வடந்துயி றோளை
யூழியீ பாத முளரியம் வருத்த
மோகையோ டுதைமலர்ச் சரண
மாழியின் மொழிகூர் திருசிவ காமி
யன்னமென் னடையவ ளருளை
யாழிபோ லருள்தி யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (35)

ஆற்றல்வா யுளத்தோர்க் கருள்விளக் கென்ன
வகவினை யெய்தியோர் தமக்கு
வேற்றுமை யாகிக் கதியுறா வண்ணம்
வெறுத்தனை யடுமையின் பாவ
மாற்றவுஞ் செவ்வி யறிசிவ காமி
யருங்கர மதனினின் றெழுந்த
வாற்றினை யுடையா யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே. ... (36)

மணவணி யுய்க்கு மறையவர் வேள்வி
மல்குசீர் மந்திரக் கலிப்புங்
குணவணி மயிலார் சோபனக் கானங்
குலவிடு மட்டமங் கலங்கள்
பணவணி யல்குற் றிருசிவ காமி
பார்த்தக விழியினாற் களிக்கு
மணலருள் துய்ய வங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (37)

எம்முளந் தூங்கும் புணர்ப்பினைச் சேதித்
திகபர மோருரு வாகித்
தம்முளம் வியந்து தனியிடத் திருத்தித்
தன்னையீ மோனமுத் திரையை
வம்மென வளித்த திருசிவ காமி
வணங்கிடின் மனவணங் காற்று
மம்மனை யுடனே யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (38)

தத்துவங் கடந்து சித்துரு வாகித்
தங்கியே சிதலெறும் பீறா
வொத்தபல் லுயிரைக் காத்திட விரும்பி
யுறுந்தொழி லைந்தையு முயலு
முத்தம பரைநற் றிருசிவகாமி
யூடலுக் குணங்கிப்பின் மகிழ்ந்த
வத்தனே யெனையா ளங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (39)

கொண்முவுங் கன்னல் வலம்புரி தரளங்
கொன்னுரை சாலியின் புகருந்
தண்ணிய வேனங் குஞ்சரந் தானுந்
தண்டலைக் கையரி பாலை
திண்ணிய பணைசேர் திருசிவ காமி
திப்பிய வாக்கையோ டுறழ
வண்ணுநல் லெழில்சே ரங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (40)

பணைவயின் முளரி யாம்பல்வாய் விரிந்து
பரிந்துகு மதுமடை தேக்கித்
திணைதிளைப் பெய்தச் செம்மையஞ் சாலி
செழித்திடத் திருவருள் புரியும்
பணைபுய மாது திருசிவ காமி
பான்மையு மறிவையுங் கடந்த
வணைவிலாச் சோதி யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (41)

வயப்புலி யஞ்சுஞ் சலமுடைப் பகட்டின்
வன்முது கிடைவருஞ் சண்டன்
பயமுறச் சென்னி யுதைத்தனை மேலாம்
பாதுகை நோய்தரப் பங்கு
கயலுறுங் கண்ணாள் திருசிவ காமி
காண்குறா மெய்பனித் திடவு
மியம்பல மிஞற்றா யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (42)

ஓங்கலைப் பாவத் தொடர்வினா னுகர்ந்த
வொருமுனி செல்வனாய் நந்தி
யோங்கலாய்த் துளிர்த்த பேரொளிக் கைலை
யொளிக்கிரி யுறைந்தனை யிடத்து
மோங்கலா யுற்ற பரசிவ காமி
யொப்பருஞ் செயலெலாம் வியந்தா
யாங்கென வின்று மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (43)

நிறைபுனல் சுருதி மதியொடு மங்கி
நேர்ந்தெழு மூதையு மண்ணு
மறைதரா ஞானப் பரவெளி யாகி
யாசறு தவத்தினோர் வீடாய்
யறைதரும் வண்மைத் திருசிவ காமி
யகங்களி துள்ளிட நின்ற
வறைபுனற் சடையா யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (44)

செழிவள நிறைந்த தக்கன்மா நகரிற்
சிறப்புறு முளரியந் தடத்துச்
சுழிகொளுங் கங்கை வலம்புரி யாகிச்
சொற்றரு மன்னவ னுளத்தை
யழிவுறாச் செய்த திருசிவ காமி
யன்பொளி யுளமனை தங்கு
மழிவிலாப் பொருளே யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (45)

இயனுறு மகளிர் தநதவைச சேய்க்கு
மேற்றதன் பொற்குயத் தமுதை
மயலற வூட்டு மன்னையை நிகர்த்த
மாண்புறும் பாலிபாங் கங்கைச்
செயலெல்லாந் தலையாய் திருசிவ காமி
சேவடி வணங்கிட வன்னா
ளயலமர்ந் தருளு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (46)

அன்பினா லென்பு நெக்குநெக் குருகி
யங்கணின் விழுபுன லாறாய்த்
துன்புறும் வாழ்க்கை யிருதயத் தெண்ணாத்
துரியநல் லறிவுடை யோர்க்குப்
பொன்பணி சுடரா யுறுஞ்சிவ காமி
புகரறு காட்சியை நாளு
மன்பினோ டளிக்கு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (47)

பாசடை சருகு கிழங்கினை யுண்டு
பாவக வெழுகடல் வறப்பத்
தேசுடைத் தவத்தோ ருன்னுவான் குயிலாய்த்
தெளிகிலா வதிதமென் னிலையி
லாதனங் கொண்டுர் திருசிவ காமி
யகண்டித துவாதசாந் தத்தி
லாதர வுடனா ரங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (48)

செப்புவங் கலையக் குயமுள மடவார்
சிறுதன நோக்கின்நின் றேங்கிக்
கப்பிய காம வெறியுறுங் கொடியேன்
கவலைக ளனைத்தையு மகற்றி
யொப்பிலாச் செல்வ மருள்சிவ காமி
யுடனமர்ந் தாயெனப் பழிச்சு
மப்பரை யாண்ட வங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (49)

அமுதர்கள் சேனர் சரதமா மறையோ
ராம்பல்வாய்ச் சுரநட நல்லார்
துமுலபற் றொழிந்த ஞானசீர் முனிவர்
தூர்த்திட மலர்பல கழற்கு
யமுதநோக் களித்த திருசிவ காமி
யரசினை நீமுயற் றொருகா
லமுதமீந் தனையே யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (50)

திரையறக் கடந்த வின்பவா ரியினைத்
தீங்குறு மிணைவிழைச் சணுகாக்
கரையுறைந் தோருக் கும்பரு ணனைய
காழ்கெழு வுணர்வுபூ ரணத்தி
நிரையுள சுகமாய் திருசிவ காமி
நித்திய நின்மல னென்ன
வரைதர வுறைந்தா யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (51)

தெய்வத வேள்விப் பயனைவந் தெய்துஞ்
சிறப்புறு நன்செய லீண்டிப்
பொய்யினை முயலாப் பாலிகை நாட்டிற்
புக்குறை யாரணப் பொருளாய்
மெய்யருள் கூட்டுந் திருசிவ காமி
மேன்மையோ டிணைந்தவா னந்த
வைய்யனா யுற்றா யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (52)

பூண்மலர்ப் ,புகழ்சேர் பொற்சிலம் படிக்குப்
புரையறாத் தொண்டியல் வார்க
ணாண்மலர்ப் பாத நண்புறாப் பேதை
நங்கமா மிங்கெடும் பண்டந்
தாண்மய லகற்றுந் திருசிவ காமி
தற்பர னெனமுறை யுறையு
மாண்மலி வுடைய வங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (53)

முந்துறுந் தவத்தா லரும்பொரு வீட்டு
மோக்கமேய் பவர்முக நோக்கி
சிந்தையு மாக்கை விதலையு மடையாச்
சீர்புரி நாலரண் சூழும்
விந்தைவா யிமையத் திருசிவ காமி
விளங்கிட மௌவெணி யடியா
ரந்தமின் றெய்து மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (54)

நெடுவிழி யுடையார் தமக்கருள் புரிவை
நெகிழ்ந்திலா மனக்கொடி யவரைக்
கொடுமயல் பூட்டி நிரையமாக் குழியிற்
குவித்திடு நின்னருண் மாயை
யடுமையைப் பற்றா தருள்சிவ காமி
யம்மையோ டமர்ந்தருள் கோலம்
அடியவர் பணிய வங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (55)

உணர்வறு பிறவி யெடுத்துயா னுன்னை
யொருகண் நிலைத்துண ராது
குணமிலாக் கொடுமை வினைபுல மானேன்
குளிர்மழை யனையவா கருணை
யிணையுளத் துய்க்குந் திருசிவ காமி
யின்பநா யகனெனக் கழற
வணைதரு மகிழ்வோ டங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே ... (56)

பொருநயஞ் செறிந்த கனிந்தவா சகமும்
புலவிகல் வென்றமா விமைய
நருங்கனி யென்ன கரதலத் தோங்கு
நண்ணிய மாக்களி னிடத்துக்
கருமயல் வாட்டுந் திருசிவ காமி
கதிர்முடி பூண்டனை யெஞ்சா
யருங்கலை யாயு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (57)

நாமக ணீங்கா ஞாங்கரி னுற்று
நார்தொடி யொல்லெனக் கவரி
பூமகள் வியப்ப விரட்டுற வாயம்
போற்றொலி துந்துபி முறைகண்
மாமழை யென்ன வுறச்சிவ காமி
மகிழ்வொடு முயங்குற விசைந்தோ
யாமிர மிசைந்த வங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே ... (58)

திருந்திய மனையின் விருந்தினை யோம்பித்
தேடரு நடுநிலை வைகிப்
பொருந்திய தவத்தை யுஞற்றிடா தவரே
புலையர்க ளாமென வுரைக்கும்
பெருந்தவ மொழிசேர் தருசிவ காமிப்
பிறைநுத லுமையுட னுனையா
ரருந்தவ ருறையு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (59)

வெற்றியுங் கொடையு மாகம நெறியும்
வெள்ளிய நீறு கண்டிகையு
மற்றிய லொருவித் தொண்டரின் சார்பாய்
மகிழ்பணிக் கோழியம் வேந்திற்
குற்றரு ளீந்த வுமைசிவ காமி
யுடனமர்ந் தடியரை யாள
வற்றநோக் கியவா வங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (60)

வேணிருத் திரரும் விண்டய நினைய
விபுதருங் கின்னர முனிவ
ராணியா நிலமை வேண்டுற சித்த
ரகங்களி தூங்கின ரவர்க்கு
நாணிலா தருளி யொளிர்சிவ காமி
நங்கைதன் முலைத்தழும் பிருதோ
ளாணியா யுடையா யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (61)

சினமுள் பகையு மஞர்கொடுங் காமச்
செய்கையு மாதிய வெறுத்திட்
டினமுள சுத்த மந்திர மாலை
யின்பமாய்ப் புனைபவர் தமக்குக்
கனவரு ளீந்த திருசிவ காமி
கண்ணிணை மயக்குறப் பொங்கு
மனலமெய் யுடையா யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே ... (62)

கொன்றையம் மலருங் கோங்குகல் லாரங்
கொழுமணச் சாந்துணி பணிலம்
வன்றிரைத் தடக்கை சேர்த்திடும் பாலி
வளர்பணைத் திடர்வயி னந்து
குன்றெனத் தரளங் குவிதரப் புரியுங்
கோதறு வளம்பல நாளும்
அன்றிடா திலங்கு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே ... (63)

பொக்கணந் தண்டு கமண்டலம் வெண்ணூல்
புரிசடை யுடையமா விரத
மெக்கண மிகழா மந்திரங் காவி
யிவையொடும் பொய்யிலா தவராந்
தக்கவர் தமையா ளுமைசிவ காமி
தன்முக நோக்கியே மிளிரு
மக்கனே யெனையா ளங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே ... (64)

பிரதுரை பலவும் பிரமமாய் வேறாய்ப்
பேதமி லடியரின் சீராய்
யுரம்பெறு மகிடன் படைக்கொரு மாறாய்
யுறுமரி பிடரியின் நீலத்
தரமென பொலிந்த திருசிவ காமி
தாண்டவ மகிழ்ந்துமெய் சோர்ந்தா
யரவணி கரஞ்சே ரங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (65)

சிரதைவை ராக்கிய சாதனஞ் சால்பு
செறிநெறி யுண்மையா நிலைசேர்
விரதமா முனிவ னாற்றலை யொடுக்கி
விண்ணவர் நடுங்குறும் பேரா
ரரதனப் பணிமின் றிருசிவ காமி
யாற்றிடு மருந்தவப் பொருளே
யரணினஞ் சூழு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே ... (66)

சீர்பணி யுடையோர் பழியினைக் கவரச்
செம்பதந் திளைத்திட வெய்தி
ஆர்கதி ருள்ளப் பங்கயம் வைகி
யரசியல் புரிந்தனை யகலாப்
பேர்பெறும் வன்னத் திருசிவ காமி
பெருமிதங் கொடுங்னி மகிழும்
ஆரணி சடையோ டங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (67

விண்முத லேழு வேற்றகம் பரவும்
விழைவறுங் கருத்தினர் கனவிற்
றிண்ணிய நிலமை யருளிடும் பரையாய்ச்
சீரெழ நின்றன மறைகள்
நண்ணிடற் கரிய திருசிவ காமி
நாதனென் றுரைத்திடச் சிறந்த
வண்ணலே யெனையாள் யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே ... (68)

அண்டரா சிகளைச் சிறுமல ராக்கி
யன்பொடு பாவையர்க் கூட்ட
முண்டகப் புத்தேள் கண்டுளம் வியப்ப
மோதரும் வண்டலை புரிந்த
வண்டநா யகிநற் றிருசிவ காமி
யாதர பூதர மான
வண்டர்நா யகனே யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (69)

தண்டிகை மதங்க முதலிய வூருந்
 தனுகரப் புயவலி மன்னர்
குண்டமென் போகச் சிறப்பினை நோக்கிக்
 கோதறுத் தாண்டருள் கொடுத்த
பண்டையாய் சொற்கூர் திருசிவ காமி
 பழியுறு மலத்தினை யொழிக்கு
மண்டமா மதிசே ரங்கமா நகர்வா
 ழம்பல வாணமா மணியே (70)

வள்ளிவே தண்டம் படைகொடு போந்து
 மிடைந்திடு நேமிக ளேழுந்
துள்ளிய தொப்ப வுருத்தபா ரிடர்கள்
 துஞ்சிட வெஞ்சர மாட்டி
யுள்ளம்பூத் துற்ற திருசிவ காமி
 யூற்றங்கண் டஞ்சிய பரம
வள்ளலே யெமையா ளங்கமா நகர்வா
 ழம்பல வாணமா மணியே 1)

நஞ்சினை யுண்ணா வுயிர்பிழைத் ததுவு
 ஞாங்கரைக் குழகனுக் கீந்தும்
பஞ்சுசேர் சுவண நறைமலர்த் தாள்கள்
 பக்குவ தவத்தினோ ருள்ளந்
துஞ்சன வாதத் துறைசிவ காமி
 தூயநற் கற்பினுக் கியைந்த
வஞ்சொலார் மருவு மங்கமா நகர்வா
 ழம்பல வாணமா மணியே (72)

இந்துவி னிடையி னவ்வியங் குறிபோன்
 றின்புறு நன்கொளி நோக்கும்
புந்தியிற் பொதிந்த வெண்ணுறா வண்டம்
 புக்குறை மாக்களி னிடத்துச்
சிந்துறாக் கருணை யுறுசிவ காமி
 செம்மலென் றெண்ணியே நாளும்
அந்தியிற் பணியு மங்கமா நகர்வா
 ழம்பல வாணமா மணியே (73)

பொருவருஞ் சீர்த்தி முன்னெறித் தொழும்பு
பொய்யுறா தேற்றியோர் தமது
இருநெறி யணுகாத் தனிநிலை யருளு
மிங்கிதக் குடிலையின் முடியில்
வருபரை தன்னை நினைப்பவர் முன்னம்
வந்தருள் புரிதர விவரு
மருள்விடை யுடையா யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (74)

ஞானபா னுவைப்போன் மின்னிய வனப்பு
நளிர்பத மிகுளைய ரீண்டித்
தேனிழி யலர்கள் செம்பத நிறைத்துச்
செல்வமுஞ் சீர்த்தியும் வேண்டத்
தூநல மவர்க்கீந் தருள்சிவ காமி
தொழும்பரை யழகொடு பணிவோ
ரானவர் துன்னு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (75)

பவமதை யொழித்துப் பற்றிக லற்றுப்
பண்பொடு நினைபவர் தம்மை
யெவர்களும் பணிய வினிதருள் புரியு
மெண்வகை யுருவநல் லொருவ
கவலையின் மனத்து முனிவர்க ளுடனே
கடையனை யாண்டருள் புரிவா
யவலையேய் கமலத் தங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (76)

ஐந்துமா றடக்கி குணவழக் கீண்டி
யாதர மாறினு மேலாய்
இந்துபோ லொளிருந் தனிக்குண முற்றி
யிமையள வொழிந்திடா முத்தர்
சிந்தைசெய் பொருளாய்த் திகழ்சிவ காமி
சீறடி தனைவரு டுதலை
அந்தரர் துதிசெ யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (77)

கொற்றம்வா யகண்ட மாயையால் மாக்கட்
கோறலை யெய்திடப் படுத்தித்
சுற்றமா மலகை யெனைதொடர்ந் தலைப்பத்
துன்புழ லாவகை யாள்வாய்
பெற்றமா மதனிற் பிறைநுத லான
பெய்வளை யுடனடைந் தடிய
ரற்றநீத் தருளு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (78)

மங்கல முறைந்த சைவமா நீதி
மன்னிட வெடுத்தெடுத் தேத்தும்
பொங்கல மனைய வெங்குரு நாதன்
புரிகழல் சிந்தையி லமைய
விங்கருள் புரிதி யென்பவர் களிக்கு
மின்னருண் மிகுசிவ காமி
யங்கண வென்ன வங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (79)

சீர்புரை சோம மண்டிலம் பொருவுஞ்
செவ்விய தொண்டைமண் டலத்துக்
கார்முறை தூர்த்துத் தெருளினைந் தருவை
காமமா கோட்டத்தின் வைகி
யார்வமாய் வளர்க்குந் திருசிவ காமி
யறிவருஞ் செம்பொருட் பரம
வார்வலர் பேறே யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (80)

சிற்றிலி னடிமை பன்னலைப் போன்று
சிதைவுறா நிலைபெறுஞ் சுத்த
முற்றொளி வீட்டை யளிப்பது சாந்த
மொண்குணப் பிழம்பென வுரைத்துக்
கற்றைவான் முறுவற் றிருசிவ காமி
கணித்திடுங் கரையிலாப் பெருக்கா
யற்றமில் லானே யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (81)

அணுக்களை யணைந்து துன்னலை யெய்து
மாழ்மல மூன்றினை யொருவித்
துணுக்குறு மனத்தாருள்ளமே னடந்து
தோன்றிய பரிதியைப் போல
விணக்கமா யிலகுந் திருசிவ காமி
யியற்கையா ரறிவினுக் கியைந்தா
யணக்கிலாப் பெரியோ யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே ... (82)

தேனின மலரை யீண்டுறா வதுபோற்
றெய்விகக் கழலிணை மறவாத்
தேனினை யொத்துத் திகழ்மொழிப் பரைக்கண்
சிற்சுகம் பெற்றிடத் துதிசெய்
மானினங் கண்ணா டிருசிவ காமி
மாதரா ளிடத்தினின் மருவ
வானின மூர்வோ யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (83)

சரிதைமுன் றினையுந் தெளிந்துமே லாய
சத்திய ஞானமே முத்திச்
சுருதியின் வாய்மை கேடிலா துற்றுச்
சுகம்பெற வுலகியன் மாக்கள்
பரிவொடு பணியும் பகவதி யான
பாவைநல் லெழிற்சிவ காமி
அருகணை தரநல் லங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (84)

சுரதரு வுறைந்த கிள்ளையைப் போன்று
சுகமுறுஞ் சதுர்மறைப் பொருளை
விரதமா யுணர்த்துஞ் சுகக்கட லாகி
வியன்புவி யேனைய விரித்த
பரையபி ராம வல்லியா மெங்கள்
பாவைநல் லெழிற்சிவ காமி
அரிதெனா தருளு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (85)

வாய்மையுஞ் சால்பும் விழுமிய குடியும்
வண்மையுந் திண்ணிய பொறையு
மாய்தரா நெறியுஞ் சிவகுறி செறிந்த
மல்லலம் பகிரதிச் செல்வ
ராயினர்க் கருளி யன்பரை யாளு
மானந்த நற்சிவ காமி
ஆயிவாழ் தளிசே ரங்கமா நகர்வா
ழும்பல வாணமா மணியே (86)

ஏனைய பொருள்கண் மித்தையென் றுள்ளி
யெண்குண வடிவதா யிலங்கு
மானவா னந்தச் சோதியை யுளத்து
மகிழ்வுட னினைப்பவர் தமக்கே
யானதா யென்ன வருஞ்சிவ காமி
வன்னையோ டமர்ந்தரு ளழக
ஞானவா ரமுதே யங்கமா நகர்வா
ழும்பல வாணமா மணியே (87)

உணர்வுநன் கொழுக்க தியானமா தவமு
முணங்கிலாக் கேள்வியு மேலா
யணங்குயா தென்னச் சிவனெனத் தேறி
யகம்புறத் தொருநிறை யின்ப
வணங்கலை வியந்த திருசிவ காமி
வாழ்வினி னுறைந்தசிற் றுருவாய்
யணங்கினை யொழியா யங்கமா நகர்வா
ழும்பல வாணமா மணியே (88)

ஏகநா யகனலி மையவர் தலைவ
னிலங்கொளிச் சடைமுடி யதனின்
மாகம்வாழ் தருநன் மதிப்பிள வணிந்த
மறையவ னிறையவ னென்னா
நாகநா டுடையார் பணியெழுற் பரம
நாயினேன் றனையினி தாள்வாய்
ஆகமா வுலவு மங்கமா நகர்வா
ழும்பல வாணமா மணியே (89)

பேரலை யொலிக்குஞ் சீருள பாலி
பிறங்கிய தடம்பணை தவழ்ந்து
கோரலை யெய்தாத் தனதனன் னகர்போற்
கொழுவிய வளத்தினான் மாறாத்
தேரலி நின்கூர் திருசிவ காமி
தெண்ணிலா முகநனி மகிழ்ந்தா
லாரலை சடையா யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (90)

பிரணவத் துள்ளி லொளிருநல் லொளியைப்
பேசொணா திருந்துநன் கறியுங்
கரணமுங் கடந்து வெளியினூ டுருவிக்
கருத்துறாப் பெரியவர்க் கினிய
தருணநா யகிநற் றிருசிவ காமி
தாழ்ந்துறு சேவடி தனையெற்
கருநலஞ் செய்யா யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (91)

யாமளை காளி வராகிய பிராமி
யந்தரி நீலி மாதங்கி
சாமள ரூபிய யிராணிமா வல்லிச்
சடாதரி முக்கணி மறைநால்
காமுறுந் துரிய திருசிவ காமி
கனதன மிணையுநன் மார்ப
நாமரு ளாள வங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (92)

ஏக்கமா மோக்கங் கடந்தநா வலர்க
ளின்றமிழ் பண்ணுறக் கேட்டு
மாக்களிப் பெய்திக் குதுகலித் துள்ள
மட்டறா மேலருள் செய்து
தாக்கரும் வண்ணத் திருசிவ காமி
தன்னெழிற் குக்குநா ணாளு
மாக்கமெய் துற்றா யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (93)

வினையினாற் பந்த மெய்துமிக் காயம்
வீழ்தராச் சித்தியைப் பெற்றோ
ருனைநெடு நோக்கா னிமலசிற் றில்வி
லுகந்திடு மணிலம்வந் தீண்டாப்
புனைமணி விளக்காந் திருசிவ காமி
புரையறத் தெளிந்தமெய்ப் பொருளே
யனைவரும் புகழு மங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே ... (94)

தமையினா லெண்ணாக் கற்பம்வந் தெய்தித்
தளருறா சுத்தநன் னிலையி
னமைதரச் செய்யும் பாலிமா நாட்டி
னற்றவர்க் கினியநல் லுயிரா
முமையெனு நாமத் துயர்சிவ காமி
யுகந்தரு ளன்பர்க ணாளு
மமையுநல் லெழில்சே ரங்கமா நகர்வ
ழம்பல வாணமா மணியே (95)

ஊர்மலை தவள கவிகையே யரச
ருவந்திடு மார்க்கமு மாக்கை
யாருடன் மதங்க னுகர்விளம் போன்றே
யறிந்துமா சீலநற் றவத்தா
ரார்வமா யிசைக்குந் திருசிவ காமி
யாரிடப் புறமுடை யமுதே
ஆர்திணி சடையோ டங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (96)

அங்கமா நகரைக் கனவிலும் மறவா
தாவலித் தேத்தினர் பாதஞ்
சேங்கையால் வணங்கி யுன்னியே பன்னிச்
சீர்பெறா துழலுறு நெஞ்சைத்
தங்கிடச் செய்யுந் திருசிவ காமித்
தாயொடு மிந்திரத் தவிசில்
அங்கணுற் றமர்ந்தா யங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (97)

சுதையினைக் கமழச் சுவர்த்தல நீவுஞ்
சுந்தர வனிதையர் துணைவ
ரிதையபங் கயத்தைப் பொங்குறச் செய்தே
யின்பொடு மருவுறு நாட்டிற்
றுதையுநல் லன்பைப் பக்குவர்க் களிக்குஞ்
சுத்த சத்துவச் சிவகாமி
அதிமகிழ் வுடனா ரங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே (98)

தீம்புனல் வைகை மாநதி நாடன்
றிப்பிய வேள்வியிற் கொழுந்தாய்
வாம்பரி யுகைக்கு மன்னவர் களிக்க
வனிதைபொன் மாலையின் மடியிற்
தாம்பரி வாடல் செய்சிவ காமத்
தற்பரை கொழுநனாய்க் கீர்த்தி
தாம்புக லொண்ணா தங்கமா நகர்வா
ழம்பல வாணமா மணியே ... (99)

வெள்ளறி வுடையேன் மெய்ம்மொழிப் பாணர்
விழைந்துகூர் பனுவலைக் கேட்ட
கள்ளவெஞ் செவிக்கு மின்பமா வெள்ளங்
கசிந்தன னவன்னரு ளாலே
வுள்ளிய தீமை தீர்சிவ காமிக்
கொருபுற மீந்தரு ளொருவ
வள்ளிலை வடிவேற் குமரனை யீன்ற
வம்பல வாணமா மணியே (100)

## வாழ்த்து

வாழியே மெழிற்கண் வாழி யங்கநகர்
வாழி யம்மைசிவ காமிசீர்
வாழிமா மதுரை வாழி நாவலர்கள்
வாழி சைவநெறி யெங்கணும்
வாழி கங்கைகுல மேழி செல்வர்கள்
வாழி போகநிதி பாலியும்
வாழி யம்பலவன் வாழி தொண்டர்பதம்
வாழி தண்டமிழின் மாலையே

—

*அங்கபுரத் தம்பலவாண மாலை முற்றுறறு*

## பேராசிரியர் அ. மு. ப. வின் நூல்கள்

## மொத்தம் எண்பது

### தற்போது விற்பனைக்கு உள்ளவை

| | | |
|---|---|---|
| 1. | கவிதையும் வாழ்க்கையும் | 20.00 |
| 2. | காப்பியக் கதைகள் | 10.00 |
| 3. | வாழ்வுப்பாதை (நாவல்) | 10.00 |
| 4. | துன்பச்சுழல் (,,) | 7.00 |
| 5. | இளமையின் நினைவுகள் (வாழ்க்கை வரலாறு) | 8.00 |
| 6. | கொய்த மலர்கள் | 8.00 |
| 7. | மக்கட் செல்வம் | 6.00 |
| 8. | பெண் | 6.00 |
| 9. | மனிதன் எங்கே செல்கிறான்? | 6.00 |
| 10. | தாயின் மணிவயிற்றில் | 2.00 |
| 11. | தொழில் வளம் | 15.00 |
| 12. | எல்லோரும் வாழவேண்டும் | 7.00 |
| 13. | வெள்ளி விழாச் சொற்பொழிவுகள் | 10.00 |
| 14. | மலைவாழ் மக்கள் மாண்பு | 10.00 |
| 15. | சமுதாயமும் பண்பாடும் (அச்சில்) | 40.00 |
| 16. | சிறுவர்களுக்கு | 7.00 |
| 17. | வானொலி வழியே | 8.00 |
| 18. | நாலும் இரண்டும் | 8.00 |
| 19. | தமிழ் உரைநடை | 15.00 |
| 20. | 19ஆம் நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சி | 10.00 |
| 21. | பல்கலைக்கழக நினைவுச் சொற்பொழிவுகள் | 20.00 |
| 22. | சாத்தனார் | 6.00 |
| 23. | கவிதை உள்ளம் | 10.00 |
| 24. | டாக்டர் மு. வ. வின் தமிழ்த்தொண்டு | 10.00 |
| 25. | தமிழக வரலாறு (அச்சில்) | 30.00 |
| 26. | வையைத் தமிழ் | 8.00 |
| 27. | கங்கைக் கரையில் காவிரித்தமிழ் | 10.00 |
| 28. | தமிழ்நாட்டு விழாக்கள் | 6.00 |
| 29. | காஞ்சி வாழ்க்கை (வாழ்க்கை வரலாறு) | 8.00 |
| 30. | வழுவிலா மணிவாசகர் | 7.00 |
| 31. | நல்ல தமிழ் | 10.00 |
| 32. | ஏழு நாடுகளில் எழுபது நாட்கள் | 36.00 |
| 33. | Gleaning of Tamil Culture | 5.00 |
| 34. | Ancient Temples of Tamilnadu | 30.00 |
| 35. | The Historical studies of Thevaram | [illegible].00 |
| 36. | திரும்பிப் பார்க்கிறேன் திகைத்து நிற்கிறேன் (வாழ்க்கை வரலாறு) அச்சில் | |